# செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண்.54/2024** **நாள் : 07.08.2024**

## மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள் ரூ.4276.44 கோடி மதிப்பீட்டில் பேரூரில் அமைக்கப்பட்டுவரும் நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் நிலையத்தின் கட்டுமானப் பணிகளை ஆய்வு செய்தார்

மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள் இன்று (07.08.2024) சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் சார்பில் 4 ஆயிரத்து 276 கோடியே 44 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், பேரூரில் அமைக்கப்பட்டுவரும் நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் நிலையத்தின் கட்டுமான பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

**பின்னர், மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது:-**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கான குடிநீர், பூண்டி, சோழவரம், புழலேரி, கண்ணன்கோட்டை தேர்வாய்கண்டிகை, செம்பரம்பாக்கம், வீராணம் ஆகிய ஏரிகள் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. சென்னை மாநகரின் நீண்ட கால குடிநீர்த் தேவை மற்றும் மக்களின் அன்றாட குடிநீர் தேவையைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு அரசு கடல்நீரை குடிநீராக்கும் நிலையங்களை அமைத்து வருகிறது.

அதனடிப்படையில், முதன்முதலாக தமிழ்நாட்டில் மீஞ்சூர் காட்டுப்பள்ளியில் ரூ.500 கோடி மதிப்பீட்டில் நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 2010-ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டது. இந்நிலையில், 23.02.2010 அன்று நெம்மேலியில் அன்றைய துணை முதலமைச்சரான மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ரூ.805 கோடியே 8 லட்சம் மதிப்பீட்டில் நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட இரண்டாவது கடல்நீரை குடிநீராக்கும் நிலையத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள். இப்பணிகள் முடிக்கப்பட்டு தற்போது சுமார் 10 இலட்சம் மக்கள் பயன் பெறும் வகையில் தினசரி குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், நெம்மேலியில் ரூ.1516 கோடியே 82 இலட்சம் மதிப்பீட்டில் நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் நிலையம் அமைப்பதற்கான பணிகள் முடிக்கப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 24.02.2024 அன்று பொது மக்களின் பயன்பாட்டிற்கு தொடங்கப்பட்டு 9 இலட்சம் மக்கள் பயன் பெறும் வகையில் தினசரி குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

சென்னையின் வளர்ச்சிக்கேற்ப குடிநீர் ஆதாரங்களை மேம்படுவதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 21.08.2023 அன்று சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் சார்பில் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை (JICA) நிதியுதவியுடன் செங்கல்பட்டு மாவட்டம், கிழக்கு கடற்கரைச் சாலையில் உள்ள பேரூரில், 4 ஆயிரத்து 276 கோடியே 44 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில்,

நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையத்திற்கு அடிக்கல் நாட்டினார்.

அதன் அடிப்படையில் இந்நிலையத்தின் கட்டுமான பணிகள் தற்போது முழுவீச்சில் நடைப்பெற்று வருகிறது. சுற்றுச்சுவர் கட்டுமான பணி, சுத்திகரிக்கப்பட்ட நீர்சேகரிப்பு தொட்டி (Product water tank), நீர்சேகரிப்பு தொட்டி (Clear water reservoir), கசடுகளை கெட்டிப்படுத்தும் பிரிவு (Sludge Thickener), நிர்வாக கட்டிடம் (Administration building) மற்றும் கடல் நீரை உட்கொள்ளும் கட்டமைப்பு (Intake Structure) பண்டகசாலை (Warehouse), ஊடுருவி தொட்டி (RO Permeate Tank) மற்றும் நடுநிலைபடுத்தும் தொட்டிகளுக்கான (Neutralization Pit) பணிகள் நடைபெற்று வருகின்றது.

இந்நிலையத்தில், கடல்நீரை குடிநீராக்க 1150 மீட்டர் நீளத்திற்கு கடலுக்குள் HDPE குழாய்கள் பதிக்கப்படும். மேலும், இந்நிலையத்தில் அமைக்கப்படும் நீர் கரைந்த காற்று அலகுகள் (Dissolved Air Floatation) மற்றும் இரட்டை ஈர்ப்பு மணல் வடிகட்டி அலகுகள் (Dual Media Filter) மற்ற வழக்கமான நிலையங்களை விட நவீன முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த அலகுகள் மூலம் கடலில் உள்ள கசடுகள் (மிதப்பவை, துகள்கள்) தற்போதுள்ள நிலையிலும், அதன் பிறகு கடல்நீரை குடிநீராக்கும் திறனை நிலையாகப் பெறும் வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும், இதற்காக, இந்நிலையத்திலிருந்து போரூர் வரை 59 கி.மீ நீளத்திற்கு குடிநீர் குழாய் பதிக்கப்படும்.

இந்த நிலையத்தின் மூலம், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகள், தாம்பரம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு அருகாமையில் உள்ள 20 ஊராட்சிப் பகுதிகளில் உள்ள 22.67 இலட்சம் மக்கள் பயன் அடைவார்கள் என மாண்புமிகு அமைச்சர் தெரிவித்தார்.

இப்பணிகளை ஆய்வு செய்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அனைத்து பணிகளையும் குறிப்பிட்ட கால அளவுக்குள் முடிக்கப்பட்டு பொது மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரவேண்டுமென அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இவ்வாய்வின் போது, திருப்போரூர் சட்ட மன்ற உறுப்பினர் திரு.எஸ்.எஸ்.பாலாஜி, அரசு முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், இ.ஆ.ப., செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் திரு. ச. அருண்ராஜ், இ.ஆ.ப., சென்னை குடிநீர் வாரிய செயல் இயக்குநர் திரு.செ.சரவணன், இ.ஆ.ப., செங்கல்பட்டு சார் ஆட்சியர் திரு. வெ.நாராயண சர்மா, இ.ஆ.ப., சென்னை குடிநீர் வாரிய தலைமை பொறியாளர் திருமதி.வெ.திலகவதி, மேற்பார்வை பொறியாளர் திருமதி. இ.சாந்தி, செயற்பொறியாளர் திரு.ஸ்.கிருபாகரவேல், வி.எ.டெக் வபாக் நிறுவனத்தின் துணை தலைவர் திரு.கே.சரவணன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்,
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவுநீரகற்று வாரியம்

சென்னை குடிநீர் வாரியத்தின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள
CHN_Metro_Water CMWSSB chennaimetrowater cmwssb.tn.gov.in